**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 35 of 2025**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சின்னபொண்ணு** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.02.02.2026**

**முதல் விசாரணை**

நான் கூடலூரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 11.02.2024 ம் தேதி எனது கணவர் ஆடு ஓட்டிக் கொண்டு சிறுவயலூர் வயல்காட்டிற்கு சென்றார். நான் கூலி வேலைக்கு சென்றுவிட்டேன். திரும்ப மதியம் 2 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்த போது எனது கணவர் வரவில்லை. அதனால் நான் மதியம் 3 மணியளவில் சிறுவயலூர் வயலுக்கு எனது கணவவரை தேடி சென்றபோது எதிரியின் வயலில் ஆடு சென்றுவிட்டதால் எதிரியானவர் எனது கணவரை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார். இதை பார்த்த நான் பெரிய மனுசன ஏன் இப்படி அடிக்கிறீங்க, எதுவா இருந்தாலும் சொல்லலாம்ல என்று சொன்னபோது, எதிரி என்னை பார்த்து தேவுடியா புண்ட எதுக்குடி என் வயலுக்கு ஆடு ஓட்டிட்டு வந்தீங்க, இது உன் புருசன் வீட்டு வயலா என்று அசிங்கமாக பேசி, கையால் கண்ணத்தில் அடித்தார். கையில் வைத்திருந்த சாவியால் இடது கையில் குத்தி காயம் ஏற்படுத்தினார். (சாட்சி சாட்சியம் அளிக்கும்போது அழுது கொண்டே சாட்சியம் அளித்தார்) எதிரி என்னை பார்த்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அதில் எனக்கு உயிர் பயம் ஏற்பட்டது. பின் எனது மகள் சுகன்யாவுக்கு போன்

மூலமாக தகவல் சொன்னோம். அதன்பிறகு எனது மகள் சம்பவ இடத்திற்கு வந்து என்னையும், எனது கணவரையும் சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இருட்டாகிவிட்டதால் மறுநாள் காணக்கிளியநல்லூர் காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1/அ.சா.1 ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் 2 வருடத்திற்கு முன் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது என்றால் எனது மகன் படித்து காண்பித்த பிறகு நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். எதிரி என்னை உன் உயிர் என் கையில் தான் என மிரட்டியதாக எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரி என்னை உன் உயிர் என் கையில் தான் என மிரட்டியதாக சொல்லவில்லை என்றால் நான் பதட்டத்தில் இருந்ததால் சொல்லவில்லை. சம்பவம் நடந்த பிறகு நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வெளிப்புற காயங்கள் இல்லை. எனக்கு இடது கையில் கிழிந்த காயம் இருந்தது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று வேலைக்கு எந்த ஊருக்கு சென்றேன் என்றால் கூடலூர் வயலுக்கு சென்றேன். எனது கணவர் எந்த ஊரில் உள்ள வயலுக்கு ஆடுகளை ஓட்டி சென்றார் என்றால் சிறுவயலூரில் உள்ள வயலுக்கு

ஆடுகளை ஓட்டி சென்றார். சிறுவயலூருக்கும், கூடலூருக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவ தினத்தன்று மாலையில் தான் வேலை முடிந்து வந்தேன் என்றாலும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை கெட்ட வார்த்தை சொல்லி திட்டவில்லை என்றாலும், எனக்கு கொலை மிரட்டல் எதுவும் விடவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் வயலில் கீழே விழுந்ததினால் குச்சி கிழித்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது அருகில் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. தூரத்தில் தான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் நான் சத்தம் போட்டதில் அருகில் இருந்த நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சண்டையை விலக்கிவிட்டிருப்பார்கள் என்றாலும், அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.02.02 15:21:16 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி